## தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் ("நிதியம்") 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம், வழு இடம்பெற்ற காலப்பகுதியில் முன்வைக்கப்பட்ட ஒப்பிடக்கூடிய தொகைகளை மீள எடுத்து வைப்பதன் மூலம் அவற்றை கண்டு பிடித்து, கடந்த கால பொருண்மையான வழுக்களை நிதிக்கூற்றுக்களின் முதல் தொகுப்பில் பின்னோக்கிய நடைமுறையில் சரிசெய்யப்படல் வேண்டும். இவ்வாறு செய்யாமல், முன்னைய ஆண்டு சரிசெய்தல்கள் ரூபா 3,448.745 தொகை மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் செலவுகளாக காட்டப்பட்டிருந்தன. | கருத்து தெரிவிக்கவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இந்த வழுக்களை நிவர்த்தி செய்த பின்னரே 2019 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 5 இன் 31 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிநாட்டு நாணயத்தை உள்நாட்டு நாணயமாக மாற்றுகின்ற பொது எழுகின்ற இலாபம் அல்லது நட்டத்தை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், இலங்கை தேசிய கண் வங்கியினால் வெளிநாட்டு நாணயத்தை மாற்றுவதில் ஏற்பட்ட நட்டம் என இனங்காணப்பட்ட ரூபா 177,519 தொகையானது நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | - மேற்படி - |
| (இ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம், ஒரு சொத்தின் பெறுமானத்தேய்வு அது பயன்பாட்டிற்காக காணப்படும் போது தொடங்குகின்றது மற்றும் சொத்து அகற்றலின் போது சொத்தின் பெறுமானத்தேய்வு நிறுத்தப்படுகின்றது. அந்த | கருத்து தெரிவிக்கவில்லை. | - மேற்படி - |

தேவைப்பாட்டிற்கு மாறாக கொள்வனவு செய்த திகதி மற்றும் அகற்றல் திகதி என்பவற்றை கருத்தில் கொள்ளாமல், கொள்வனவு செய்த ஆண்டிற்கு தேய்மானம் செய்வதில்லை மற்றும் அகற்றல் செய்த ஆண்டிற்கு தேய்மானம் செய்தல் எனும் கொள்கை பின்பற்றப்பட்டிருந்தது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தின் வருமானமும் செலவும் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டது என்று வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தேசிய கண் வங்கி தொடர்பான வருமானம் மற்றும் செலவுகளை நிதியத்திற்கு இணைப்பதில் அது காசு அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கவில்லை. | நிதியத்தினதும் தேசிய கண் வங்கியினதும் வருமானம் மற்றும் செலவுகள் அட்டுறு அடிப்படையில் கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். பின்பற்றப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | நிதியத்தின் கருத்திட்டமான தேசிய கண் வங்கிக்கு சொந்தமான சொத்துக்களின் நிகர பெறுமதி அதாவது ரூபா 9,339,612 தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணம், ரூபா 2,890,100 கிரயமான மருத்துவ மற்றும் சத்திரசிகிச்சை வழங்கல்களின் இருப்பு, ரூபா 1,059,391 தொகையான பெறவேண்டிய கணக்குகள், ரூபா 2,837,647 தொகையான செலுத்த வேண்டிய கணக்குகள், ரூபா 1,876,949 தொகையான பெறப்பட்ட முற்பணங்கள் மற்றும் ரூபா 365,673 தொகையான முற்பணக் கொடுப்பனவுகள் என்பன நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | தேசிய கண் வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான அனைத்து தகவல்களும் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை தேசிய கண் வங்கியினை ஆரம்பிப்பதற்காக ஆசியா கோர்னியா அறக்கட்டளையிலிருந்து (Asia Cornea Foundation) 2012 முதல் 2015 வரையிலான 4 வருட காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதிசார் மற்றும் நிதிசாரா உதவிகள் முறையே ரூபா 12,873,923 மற்றும் ரூபா 7,687,236 தொகையானது கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | - மேற்படி - |
| (ஈ) | ஆசியா கோர்னியா அறக்கட்டளையின் (Asia Cornea Foundation) மானியத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த கண்டி போதனா வைத்தியசாலையின் கண் வங்கி கட்டிடத்தின் கிரயத்தை இனங்காண்பதற்கும் கணக்குகளில் எடுத்துக் கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | - மேற்படி - |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விடயம் | | நிதியத்தின் ஒன்றித்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் தொகை | தேசிய கணனி வங்கியின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் தொகை | வேறுபாடு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | | |
| (அ) | தேசிய கண் வங்கியின் விழிவெண்படல (cornea) செயலாக்க கட்டணங்கள் | 43.82 | 41.94 | 1.88 | கருத்து தெரிவிக்கவில்லை | நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் மீதிகளை தேசிய கண் வங்கியின் நிதிக்கூற்றுக்களின் மீதிகளுடன் ஒப்பிடுவதன் மூலம் வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்ததன் பின்னர் சரி செய்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | தேசிய கண் வங்கியின் செலவுகள் | 53.52 | 60.75 | 7.23 | கருத்து தெரிவிக்கவில்லை | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | தேசிய கண் வங்கியின் சிறுபான்மை யினரின் அக்கறை (Minority Interest) | 15.07 | 29.23 | 14.16 | கருத்து தெரிவிக்கவில்லை |

**1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விடயம் | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| வெளித் தரப்பினர்களின் கற்றல் மற்றும் ஆய்வு நோக்கங்களுக்காக தேசிய வங்கியில் ஐம்பெத்தெட்டு விழிவெண்படலங்கள் விநியோகிக்கப் பட்டிருந்தன. | விழிவெண் படலங்களுக்கான கோரிக்கை மற்றும் விநியோகம் தொடர்பான தகவல்கள், மற்றும் தொடர்புடைய தரப்பினர்களால் விழிவெண்படலங்கள் எடுத்துக் கொள்ளப்படாமைக்கான எழுத்துமூல சான்றுகள். | கருத்து தெரிவிக்கவில்லை | வெளித்தரப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட விழிவெண் படலங்களுக்கான கோரிக்கை மற்றும் விநியோகம் தொடர்பான தகவல்களும் விழிவெண்படலங்களை எடுத்துக் கொண்டமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களும் பேணப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1981 இன் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச்சட்டத்தின் 8 ஆம் பிரிவு | நிதியத்திற்கு சொந்தமான நிதிகளினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட உத்தரவுகளின் பிரகாரம் செய்யப்பட வேண்டுமென்ற போதிலும், தேவைப்பாட்டிலிருந்து மாறுபட்டதாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 692,000,000 தொகையானது நிலையான வைப்புக்களிலும் மற்றும் ரூபா 403,053,755 தொகையானது திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | கருத்து தெரிவிக்கவில்லை | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப்பிரமாணம் 71 | தேசிய கண் வங்கியின் 23 உத்தியோகத்தர்களின் பதவிகளின் பெயர் மாற்றப்பட்டிருந்ததுடன் 3 புதிய பதவிகள் உருவாக்கப்பட்டிருந்தன. மற்றும் அந்த உத்தியோகத்தர்கள் பொது திறைசேரியின் பிரதி செயலாளரின் முன் அங்கீகாரத்தையும் பொது நிர்வாக அமைச்சின் | கருத்து தெரிவிக்கவில்லை | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | செயலாளரின் உடன்பாட்டையும் பெற்றுக் கொள்ளாமல் குறிப்பிடப்பட்ட புதிய பதவிகளில் இணைக்கப்பட்டிருந்தன. | | |
| (ii) | நிதிப்பிரமாணம் 381 | 2016 ஆம் ஆண்டில் திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் அரச வங்கியொன்றில் சேமிப்பு கணக்கொன்று திறக்கப்பட்டிருந்ததுடன் குறிப்பிடப்பட்ட கணக்கின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 8,073,404 ஆக இருந்தது. | கருத்து தெரிவிக்கவில்லை | - மேற்படி - |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 207,163,462 தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 137,277,233 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 69,886,229 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான செலவுகள் ரூபா 183,590,255 ஆல் குறைவடைந்து இருந்த போதிலும், வருமானம் ரூபா 113,704,026 ஆல் குறைவடைந்திருந்தமை என்பன முன்னேற்றத்திற்கான காரணங்கள் ஆகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை தேசிய கண் வங்கியினை ஸ்தாபிப்பதற்கு சிங்கபூரின் ஆசிய கோர்னியா அறக்கட்டளையுடன் 2010 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் மற்றும் இலங்கை தேசிய கண் வங்கியினை நம்பிக்கை பொறுப்பாக ஸ்தாபிப்பதற்கான 2013 ஆகஸ்ட் 29 இல் பெறப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் இலங்கை தேசிய கண் | கருத்து தெரிவிக்கவில்லை. | இலங்கை தேசிய கண் வங்கியினை நம்பிக்கை பொறுப்பாக ஸ்தாபிப்பதற்கு பெறப்பட்ட அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வங்கியினை சட்டமொன்றின் மூலம் தனியான நிறுவனரீதியான கட்டமைப்பொன்றுடனான அலகொன்றாக ஸ்தாபிப்பதற்கும் தனியான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கும் 2019 மே 31 வரைக்கும் கூட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை தேசிய கண் வங்கியின் நடவடிக்கைகள் ஒரு கருத்திட்டமொன்றாக தொடர்ச்சியாக மேற்கொள்ளவும் 2007 ஏப்ரல் 05 இன் 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் சம்பளங்களை செலுத்துவதற்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 33 இன் 1.1 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை தேசிய கண் வங்கியினை ஒரு கருத்திட்டமாக கருதுவதற்கு தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. ஆகவே அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்க முடியவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | தேசிய கண் வங்கியினை ஒரு கருத்திட்டமாக கருதமுடியாது என்றும் பதவியணியினரை அதன் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்ய முடியாது என்றும் அமைச்சரவைக்கு தெரிவிக்க வேண்டும். மாற்று வழிகளை கண்டறிந்து அதன் பிரகாரம் செயல்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய கண் வங்கியை அபிவிருத்தி செய்வதற்காகவும் திறமையான கண் ஊழியர்களை உருவாக்குவதற்காகவும் 05 வருட காலத்திற்கு ஐக்கிய அமெரிக்க அரசின் சீட்டல் வே (Seattle WA) இல் அமைந்துள்ள சைட் லைப் (எஸ்எல்) (Signt Life (SL)) நிறுவனத்துடன் சுகாதாரம் போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சானது உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டது, எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டின் அடிப்படையில் தீவின் முக்கிய வைத்திய சாலைகளில் கண் வங்கியின் கிளைகளை ஸ்தாபிப்பதை இலக்காகக் கொண்ட திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்ற காரணிகள் காரணமாக யூஎஸ்டி டொலர் 14,000 தொகையினை பெற்றுக்கொள்ள முடிந்திருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை | தேசிய கண் வங்கியின் அபிவிருத்திக்கான வெளிநாட்டு உதவி வழங்கல் தொடர்பாக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | டெங்கு கருவிகள் கருத்திட்டத்தின் மீதியாக ரூபா 13,433,573 தொகை இருந்தது. இந்த கருத்திட்டத்தின் காலப்பகுதியானது 2016 ஆம் ஆண்டில் காலாவதியாகியிருந்தது. எவ்வாறெனினும், குறிப்பிட்ட தொகையினை தேசிய சுகாதார வைத்திய அபிவிருத்தி நிதியத்தின் பொது நிதியத்திற்கு மாற்றம் செய்வதற்கு அல்லது நன்கொடை முகவர்களுக்கு திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை | வெளிநாட்டு உதவி கருத்திட்டங்கள் பூர்த்தியடைந்த பின்னர் காணப்படும் மீதிகள் தொடர்பில் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இல்லையென்றால் அந்த மீதிகளை தேசிய சுகாதா அபிவிருத்தி நிதியத்தின் பொது நிதியத்திற்கு மாற்றம் செய்ய வேண்டும். |
| (இ) | 14 ஒப்பந்தங்களின் நிர்மாணிப்புக்கள் பூர்த்தியடைந்திருந்த போதிலும், 2 முதல் 5 வருட காலப்பகுதி வரை முன்கொண்டுவரப்பட்ட பிடிபணம் ரூபா 1,128,619 இனை தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது அதை வருமானமாக இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை | பிடி பணத்தினை தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது வருமானமாக இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2017 திசெம்பர் 18 இலிருந்து 2018 பெப்ரவரி 09 வரையான காலப்பகுதியில் இதய குருதிக் குழாய் வரையி (Cardiac Angiography), இரைப்பை மற்றும் கல்லீரல் புற்றுநோய் ஆகிய துறைகளுடன் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி நிரல்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலை கண்டி போதனா வைத்தியசாலை மற்றும் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை ஆகியவற்றில் உள்ள 8 கொரிய மருத்துவ அதிகாரிகளுக்கு உலக சுகாதார நிறுவனம் மற்றும் சுகாதார போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் ஒத்துழைப்புடன் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | 2017 ஆம் ஆண்டில் பயிற்சிக்காக தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கு கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 1,400,000 தொகையானது அரச வருமான கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை | அனைத்து வெளிநாட்டு நிதிகளும் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும். |
| (ii) | இதய குருதி குழாய் வரையி (Cardiac Angiography) துறையின் பயிற்சிக்காக 06 வளவாளர்களுக்கு ரூபா 60,000 செலுத்துவதற்கு தாபனப் பணிப்பாளர் அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும், 12 வளவாளர்களுக்கு ரூபா 132,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | தாபனப் பணிப்பாளரின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | பயிற்சி வகுப்பு பூர்த்தியடைந்த பின்னர் காணப்பட்ட ரூபா 1,890,857 தொகையானது உலக சுகாதார நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் உலக சுகாதார நிறுவனத்திற்கு மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

(உ) அநுராதபுரம் மற்றும் கண்டி போதானா வைத்தியசாலைகளின் வெளிநாட்டு மருத்துவ மற்றும் துணை மருத்துவ மாணவர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதற்கு வேர்க் தி வேர்ல்ட் (Work the World) நிறுவனத்துடன் உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் வேர்க் தி வேல்ட் (Work the World) நிறுவனம் மற்றும் அநுராதபுர போதனா வைத்தியசாலை ஆகியவற்றுக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் உத்தியோகத்தர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் அலுவலக முத்திரைகள் என்பன இருதரப்பினராலும் வைக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு பொறுப்பான கட்சியினரை இனங்காண முடியவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | சரியான முறையில் உடன்படிக்கைகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட வேண்டும். இவ்வாறான உடன்படிக்கை களுக்காக அமைச்சின் செயலாளருக்கு தெரிவித்து அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ii) | பயிற்சி வகுப்புக் கட்டணங்களாக அநுராபுர போதனா வைத்தியசாலைக்கு கிடைக்க பெற்றிருந்த ஸ்ரேலிங் பவுண் (ஜீபீபி) 30,900 ற்கு சமனான ரூபா 6,198,126 தொகையானது 1981 இன் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கைகள் எடுக்கப்படக்கூடாது மற்றும் அனைத்து வெளிநாட்டு நிதிகளும் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (iii) | கண்டி போதனா வைத்தியசாலையில் பயிற்சி பெற்ற மாணவர்களின் பயிற்சி வகுப்பு கட்டணங்களாக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கண்டி முதுகலை வைத்திய நிலையத்திற்கு ரூபா 27,551,528 தொகையானது கிடைக்கப் பெற்றிருந்தது. எவ்வாறாயினும், இந்த தொகையானது | - மேற்படி - | எவ்வித அதிகாரமும் இன்றி பணத்தை செலவு செய்வது தொடர்பில் முறையான புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

அரச வருமானத்திற்கு அல்லது நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் கண்டி முதுகலை வைத்திய நிலையத்தின் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 20,022,335 தொகையானது எவ்வித அதிகாரம் இன்றி செலவு செய்யப்பட்டிருந்தது.

## 3.3 சர்ச்சை தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை தேசிய கண் வங்கியினை ஒரு கருத்திட்டமாக கருதுவதற்கான அடிப்படை பூர்த்தி செய்யப்படவில்லை. 2007 ஏப்ரல் 05 ஆந் திகதியிடப்பட்ட 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அடிப்படையில் மீளாய்வாண்டு காலப்பகுதியில் நன்மதிப்பு படிகள் மற்றும் கருத்திட்ட படிகளாக 29 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 3,355,168 தொகையானது செலுத்தப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக படிகளை செலுத்துவது தவிர்க்கப்பட வேண்டும். மேற்கொள்ளப்பட்ட செலுத்துகைகளுக்கு தாபன பணிப்பாளரின் அங்கீகாரத்தை பெற அல்லது மீளப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) 2018 சனவரியிலிருந்து செப்டம்பர் வரையிலான 9 மாத காலப்பகுதியில் தேசிய இரத்த மாற்றல் சேவையால் குருதி பிளாஸ்மா (Plasma) விற்பனை தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) இரத்த பிளாஸ்மா (Plasma) விற்பனையிலிருந்து உருவாக்கப்பட்ட ரூபா 91,298,655 தொகையானது அரச வருமானத்திற்கு செலவு | கருத்து தெரிவிக்கவில்லை. | இந்த பிளாஸ்மா விற்பனையிலிருந்து உருவான வருமானம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |

வைக்கப்படுவதற்கு பதிலாக மத்திய இரத்த வங்கி அபிவிருத்தி நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ii) கொள்முதல் செய்யும் கம்பனியடம் இருந்து பெறப்பட்ட காசோலைகள் தேசிய இரத்த மாற்றல் சேவையின் பேரில் பெற்றுக் கொள்வதற்கு பதிலாக நிதியத்தின் பேரில் பெறப்பட்டிருந்தன. நிதியத்தினால் காசோலைக்காக விநியோகிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் இரத்த பிளாஸ்மா விற்பனையிலிருந்து பெறப்பட்ட நிதிகள் சார்பில் விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்குப் பதிலாக இரத்த மாற்றல் சேவையின் தேவைப்பாடுகளுக்காக நிதியத்திற்கு தொடர்புடைய கம்மனியால் மேற்கொள்ளப்பட்ட ஒரு நன்கொடையாக பற்றுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. - மேற்படி -

(iii) தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச் சட்டத்தின் 13(4) ஆம் இலக்க பிரிவின் பிரகாரம், 1979 இன் 28 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் நோக்கங்களுக்கு நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட நன்கொடைகளின் மொத்த பெறுமதி மீதான வரியிலிருந்து நன்கொடையாளர் - மேற்படி -

| | | | |
|---|---|---|---|
| | வரி விலக்களிப்புக்கு தகுதியுடையவராகின்றார். இதன் விளைவாக அரசாங்கத்திற்கு பெற வேண்டிய வரி வருமானம் நட்டமாகியது. | | |
| (இ) | நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகளுடன் இணங்க கூடிய வகையில் வெளித்தரப்பினர்களுக்கு நிதிசார் உதவியை வழங்குவதற்கான அடிப்படையொன்றும் மற்றும் குறித்துரைக்கப்பட்ட கொள்கையொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 14 எண்ணிக்கையான பல்வேறு சங்கங்களுக்கும் நிறுவனங்களுக்கும் நிதிய சட்டத்தின் 7 ஆம் பிரிவில் உள்ளடக்கப்படாத தொழிற்பாடுகளுக்கு மீளாய்வாண்டு காலப்பகுதியில் மாத்திரம் ரூபா 21,044,400 தொகை நிதி சார் உதவியாக வழங்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கவில்லை. | நிதியத்தினுடைய சட்டத்தின் தொழிற்பாடுகளின் நோக்கெல்லையில் உள்ளடக்கப் பட்டிருக்காத நோக்கங்களுக்காக உதவிகள் வழங்கப்படக்கூடாது |
| (ஈ) | தனிப்பட்ட மட்டத்திலுள்ள நோயாளிகளுக்கு உதவி வழங்குவதற்கு நிதியத்தினுடைய சட்டத்தில் ஏற்பாடுகளின் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்ற போதிலும், மீளாய்வாண்டு காலப்பகுதியில் 12 நோயாளிகளுக்கு ரூபா 11,029,810 நிதி உதவியாக வழங்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கவில்லை. | - மேற்படி - |

### 3.4 குறைப்பயன்பாடுடைய நிதியங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) குறித்துரைக்கப்பட்ட 21 நடவடிக்கைகளுக்காக பெறப்பட்ட ரூபா 28,527,514 நன்கொடைகள் 2 முதல் 30 ஆண்டு காலப்பகுதிக்குள் குறிப்பிடப்பட்ட நோக்கங்களின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | குறித்துரைக்கப்பட்ட தொழிற்பாடுகளை நிறைவேற்ற பெறப்பட்டிருந்த நிதிகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2014 ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான ஒவ்வொரு ஆண்டு காலப்பகுதியின் போதும் தேசிய சுகாதார வைத்திய நிதியத்தின் பொது நிதியத்திலிருந்து பயன்படுத்த முடியுமாக இருந்த நிதிகள் முறையே ரூபா 261,124,443, ரூபா 295,194,406, ரூபா 358,057,285, ரூபா 387,348,323, மற்றும் ரூபா 425,345,893 ஆக இருந்தன. எவ்வாறாயினும், 79 சதவீதம், 82 சதவீதம், 77 சதவீதம், 72 சதவீதம் மற்றும் 77 சதவீதம் என்பன பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தன. | கருத்து தெரிவிக்கவில்லை. | இலங்கையின் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக நிதிகளை செலவு செய்யும் நிதியத்தின் பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு பிரச்சனை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) பொருத்தமான முறையிலும் உரிய திகதியிலும் நிர்மாணிப்புக்கள் பூர்த்தியடைந்திருக்கவில்லை என்பதன் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த மீகஹகிவுல வைத்தியசாலையின் விடுதி தொகுதியின் நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக 8 வருடங்கள் கடந்திருந்த போதிலும், செயலாற்றல் பிணை ரூபா 1,372,346 இனை மீள அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை | இது தொடர்பாக முறையான புலனாய்வொன்று நடாத்தப்பட வேண்டியதுடன் பொறுப்புவாய்ந்த தரப்பினர்களிடம் இருந்து நிதிகளை மீள அறவிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆசியா கோர்னியா அறக்கட்டளையின் நன்கொடையொன்றாக இருந்த குருநாகல் போதனா வைத்தியசாலையில் கண் வங்கியினை ஸ்தாபிப்பதற்கு உசாத்துணை சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு (CECB) 2017 ஆம் ஆண்டில் ரூபா 721,962 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டில் முதல் கட்ட நிர்மாணிப்புக்களுக்கான ஒப்பந்தம் ரூபா 14,162,162 இற்கு அளிக்கப்பட்டிருந்த போதிலும், நிர்மாணிப்புக்களை தொடங்குவதற்கு முடியவில்லை ஏனென்றால் குருநாகல் வைத்தியசாலையின் வைத்திய உத்தியோகத்தர்களின் எதிர்ப்பின் காரணமாக நிலத்தை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. உசாத்துணை சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் நிலம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காமை காரணமாக ரூபா 721,962 உசாத்துணைக் கட்டணங்கள் பயனற்ற செலவினமொன்றாகியிருந்தது. | கருத்து தெரிவிக்கவில்லை | பொறுப்பாக இருப்பதுடன் பயனற்ற செலவுகளை தவிர்க்க முடியுமான திட்டமொன்றின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஒவ்வொரு சாத்தியமான நேரத்திலும், பெறுகையானது திறந்த விலைமனு செயற்பாடு மூலம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது போட்டித் தன்மையான விலைமனு கோரப்படாமல் தெரிவு செய்யப்பட்டிருந்த தனியார் வைத்தியசாலையொன்றால் செய்யப்பட்ட ஆய்வக சோதனைகளுக்கு ரூபா 4,308,602 தொகை ஏற்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கவில்லை. | அரச பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |